# *தமிழ்ப் படைப்புகளில் சமஸ்கிருத வார்த்தைகள்*

| Sl No | தமிழ்ப் படைப்பு |
|---|---|
| 01 | திருக்குறள் |
| 02 | ஆத்திச்சூடி |
| 03 | தமிழ்த்தாய் வாழ்த்து |

## திருக்குறளில் சில சமஸ்கிருத சொற்கள்

| எண் | குறள் |
|---|---|
| 1 | அகர முதல எழுத்தெல்லாம் **ஆதி பகவன்** முதற்றே **உலகு**. |
| 9 | கோளில் பொறியின் **குண**மிலவே எண்குணத்தான் தாளை வணங்காத் தலை. |
| 18 | சிறப்பொடு **பூசனை** செல்லாது வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. |
| 19 | **தானம் தவம்** இரண்டும் தங்கா வியன்உலகம் வானம் வழங்கா தெனின். |
| 29 | **குண**மென்னும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயும் காத்தல் அரிது. |
| 43 | தென்புலத்தார் **தெய்வம்** விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. |
| 60 | **மங்கலம்** என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கட் பேறு. |
| 102 | **காலத்**தி னாற்செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது. |
| 120 | வாணிகம் செய்வார்க்கு **வாணிகம்** பேணிப் பிறவும் தமபோல் செயின். |
| 215 | ஊருணி **நீர்**நிறைந் தற்றே உலகவாம் பேரறி வாளன் திரு. |
| 261 | உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற் **குரு**. |
| 266 | **தவ**ஞ்செய்வார் தங்**கருமஞ்** செய்வார்மற் றல்லார் அவஞ்செய்வார் **ஆசை**யுட் பட்டு. |
| 271 | வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் **பூதங்கள்** ஐந்தும் அகத்தே நகும். |
| 337 | ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப **கோடி**யும் அல்ல பல. |
| 360 | **காமம்** வெகுளி மயக்கம் இவ்முன்றன் **நாமம்** கெடக்கெடும் நோய். |
| 490 | கொக்கொக்க கூம்பும் **பருவ**த்து மற்றதன் குத்தொக்க சீர்த்த இடத்து. |
| 580 | பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க **நாகரிகம்** வேண்டு பவர். |
| 636 | **மதி**நுட்பம் நூலோடு உடையார்க்கு **அதி**நுட்பம் யாவுள முன்நிற் பவை. |
| 682 | அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை **தூது**ரைப்பார்க்கு இன்றி யமையாத மூன்று. |
| 706 | அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் **முகம்**. |
| 763 | ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை **நாகம்** உயிர்ப்பக் கெடும். |
| 931 | வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம் தூண்டிற்பொன் **மீன்**விழுங்கி அற்று. |
| 958 | நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் **குல**த்தின்கண் ஐயப் படும். |
| 1029 | இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ **குடும்ப**த்தைக் குற்ற மறைப்பான் உடம்பு. |
| 1073 | **தேவர்** அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுக லான். |
| 1086 | கொடும்**புருவம்** கோடா மறைப்பின் நடுங்கஞர் செய்யல மன்இவள் கண். |
| 1116 | **மதி**யும் மடந்தை முகனும் அறியா **பதி**யின் கலங்கிய **மீன்**. |
| 1157 | துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை இறைஇறவா நின்ற **வளை**. |

## ஆத்திச்சூடியில் சில சமஸ்க்ருத சொற்கள்

| | | |
|---|---|---|
| 27 | வஞ்சகம் பேசேல் | மனத்திலே வஞ்சம் வைத்துக் கொண்டு பிறரிடம் பேசாதே! |
| 32 | கடிவது மற | பிறரோடு கோபமாகப் பேசியதை மறந்துவிடு |
| 33 | காப்பது விரதம் | உயிர்களைக் காப்பதைக் க்டமையாக எண்ணு |
| 36 | குணமது கைவிடேல் | நல்ல குண்ங்ளை விட்டுவிடாதே! |
| 44 | சக்கர நெறி நில் | அரசனுடைய ஆட்சி முறைப்படி நட!! |
| 46 | சித்திரம் பேசேல் | வீணான மொழிகளைப் பேசாதே! |
| 56 | தானமது விரும்பு | தானம் கொடுப்பதற்கு விருப்பங்கொள்வாயாக!!! |
| 59 | துன்பத்திற்கு இடம் கொடேல் | துன்பம் வரக்கூடிய செயல்களைத் தவிர்ப்பாயாக!! |
| 61 | தெய்வம் இகழேல் | தெய்வத்தை இழிவாகப் பேசுதல் கூடாது |
| 62 | தேசத்தோடு ஒட்டி வாழ். | உன்னுடைய நாட்டு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வாயாக ! |
| 69 | நீர் விளையாடேல். | தண்ணீரிலே விளையாதே |
| 82 | பூமி திருத்தி உண் | நீலத்தை பண்படுத்தி பயிரிட்டு வாழ்வாயாக |
| 88 | மனம் தடுமாறேல் | எத்தகைய நிலையிலும் கலக்கம் அடையாதே |
| 93 | மூர்க்கரோடு இணங்கேல் | முரடர்களோடு சேராதே |
| 98 | மோகத்தை முனி | காம ஆசைகளை விட்டொழிப்பாயாக |
| 100 | வாது முற்கூறேல் | வாக்குவாதம் வருவதற்குரிய சொற்களை நீ முன்னால் பேசாதே |
| 101 | வித்தை விரும்பு | கற்பதிலே ஆர்வம் கொள்வாயாக |
| 103 | உத்தமனாய் இரு | உலகத்தவருடன் நல்லவனாக நடந்து கொள் |

## தமிழ்த்தாய் வாழ்த்து

பேராசிரியர் மனோன்மணீயம் பெ. சுந்தரம் பிள்ளை இயற்றியது.இந்த பாடல் மனோன்மணீயம் என்ற நூலில் வருகிறது. கடவுள் வணக்கத்திற்கு அடுத்ததாக தமிழ்த் தெய்வ வணக்கத்தில் வருகிறது. இந்தப் பாடலில் பல சமஸ்கிருத சொற்கள் உள்ளன.

**நீரா**ருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் **வதன**மெனத் திகழ்**பரத கண்ட**மிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த **திராவிட** நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் **தரித்த**நறுந் **திலக**முமே
அத்திலக **வாசனை**போல் அனைத்**துலகு**ம் இன்பமுற
எத்**திசை**யும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்கே! ***
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

விளக்கம்:-

நீலக் கடலை வண்ண ஆடையாக உடுத்திய நிலமகளுக்குப் பாரத நாடு முகமாக விளங்குகிறது.
அதன் பிறை போன்ற நெற்றியில் தெற்குப் பகுதி ஒளிர்கிறது.
அந்த நெற்றியிலே இட்ட திலகமாக தமிழ்நாடு திகழ்கிறது.
அத்திலகத்திலிருந்து பரந்து செல்லும் நறுமணம் தான் தமிழ்த்தாய் (தமிழ் மொழி).
அந்த நறுமணத்தின் மூலம் அனைத்து உலகும் இன்பமுறுகிறது.
அதனால் அகில உலகிலும் புகழ்பெற்றுச் சிறக்க வீற்றிருக்கிறாள்.

### *** இந்த வரிகள் வாழ்த்தில் பாடப்படுவது இல்லை

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்குங் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே பொன்றுபல ஆயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்

விளக்கம்:-

பல உலகங்களையும் உயிர்களையும் படைத்துக் காத்து ஒடுக்கும் பரம்பொருள் போல் இன்னும் என்றும் இளமையாகவே இருக்கிறாள் தமிழ்த்தாய்.
தமிழ்த்தாயின் மயக்குறு மக்களே கன்னடமும், தெலுங்கும், மலையாளமும் துளுவும்.
தமிழ்மொழி பரம்பொருள் போன்றது. ஆதலால் ஆரிய மொழி போல் உலக வழக்கொழியாதது, இறவாதது. என்றும் இளமைப் பொலிவுடன் வாழ்வது; வான்புகழ் பெறுவது.